பரமக்குடி நகராட்சி
அலுவலகம் நாள்**23.01.2023.**

**அன்புடையீர்,**

பரமக்குடி நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் நிகழும் சுபகிருதுவருடம் தை மாதம் (25.01.2023) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த அவசரக்கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்

பொருள்.1

15th CFC 2022-23 Untied Grand திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட அணுகுசாலையில் LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.84.97 இலட்சத்திலான பணிக்கு 28.12.2022 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | **Hruday Infra and Resource Solution PVT., 2/3, Crescent Park Street, Thiyagaraya nagar Chennai** | Online Only |
| 2. | **Schnell Energy Equipment Pvt.Ltd 6/4, Ranganayaki Nagar, Periyanaickenpalayam, Coimbatore – 6441020** | Online Only |
| 3 | **Ohmstronics Lighting Solutions, Chennai** | Online only |
| 4. | **Dharshan Enterprices, Chennai** | Online only |

மேற்படி வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 28.12.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் 04.01.2023 அன்று தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 3 மற்றும் 4 க்கு தொழில்நுட்ப தகுதிகள் இல்லாத நிலையில் வ.எண் 1 மற்றும் 2 க்கு தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 05.01.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | **Hruday Infra and Resource Solution PVT., 2/3, Crescent Park Street, Thiyagaraya nagar, Chennai** | BOQ -1 - மதிப்பீட்டை விட 4.55 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 4.33% அதிகம் |
| 2. | **Schnell Energy Equipment Pvt.Ltd 6/4, Ranganayaki Nagar, Periyanaickenpalayam, Coimbatore - 6441020** | BOQ -1 - மதிப்பீட்டை விட 12.16 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 16.37 % அதிகம் |

மேற்படி வரப்பெற்ற விலை விகிதத்தில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுதத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை குறைத்து தரக்கோரி 06.01.2023, 10.01.2023 மற்றும் 11.01.2023 அன்று மூன்றாவது முறையாக சம்மதக் கடிதம் கோரியதில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி BOQ-1க்கு 0.03% மதிப்பீட்டை விட குறைவாகவும் O&M BOQ-2 க்கு 0.01% மதிப்பீட்டை விட குறைவாகவும் பணி செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஒப்பந்தப் புள்ளியை எற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.388, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| பொருள்.2 | 15th CFC 2021-22 Untied Grand திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப்பகுதிகளில் LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.16.48 இலட்சத்திலான பணிக்கு 28.12.2022 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| | | |
|---|---|---|
| 1. | **Hruday Infra and Resource Solution PVT.,<br>2/3, Crescent Park Street,<br>Thiyagaraya nagar, Chennai** | Online Only |
| 2. | **Schnell Energy Equipment Pvt.Ltd<br>6/4, Ranganayaki Nagar, Periyanaickenpalayam,<br>Coimbatore - 6441020** | Online Only |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 28.12.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் 04.01.2023 அன்று தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 05.01.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| | **Hruday Infra and Resource Solution PVT.,<br>2/3, Crescent Park Street,<br>Thiyagaraya nagar, Chennai** | BOQ -1 - மதிப்பீட்டை விட 4.26 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 4.44 % அதிகம் |
| | **Schnell Energy Equipment Pvt.Ltd<br>6/4, Ranganayaki Nagar,<br>Periyanaickenpalayam, Coimbatore – 6441020** | BOQ -1 - மதிப்பீட்டை விட 9.03 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 11.33 % அதிகம் |

மேற்படி வரப்பெற்ற விலை விகிதத்தில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுதததுள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை குறைத்து தரக்கோரி 06.01.2023, 10.01.203 மற்றும் 11.01.2023 அன்று மூன்றாவது முறையாக சம்மதக் கடிதம் கோரியதில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி BOQ-1 க்கு 0.02% மதிப்பீட்டை விட குறைவாகவும் O&M BOQ-2 க்கு 0.03% மதிப்பீட்டை விட குறைவாகவும் பணி செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
1. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை எற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.389, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| பொருள்.3 | SUIDF 2022-23 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.301.20 இலட்சத்திலான பணிக்கு 28.12.2022 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| | | |
|---|---|---|
| 1. | **Hruday Infra and Resource Solution PVT.,<br>2/3, Crescent Park Street,<br>Thiyagaraya nagar, Chennai** | Online Only |
| 2. | **Schnell Energy Equipment Pvt.Ltd<br>6/4, Ranganayaki Nagar, Periyanaickenpalayam,<br>Coimbatore - 6441020** | Online Only |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கிய உறை ஆணையாளர் அவர்களால் 28.12.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக்குழு மூலம் 04.01.2023 அன்று தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்குரிய (Price Bid) விலைப்பட்டியல் அடங்கிய உறை 05.01.2023 அன்று திறக்கப்பட்டதில் பின்வருமாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| | | **Hruday Infra and Resource Solution PVT., 2/3, Crescent Park Street, Thiyagaraya nagar, Chennai** | BOQ -1 - மதிப்பீட்டை விட 4.45 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 4.73 % அதிகம் |
| | | **Schnell Energy Equipment Pvt.Ltd 6/4, Ranganayaki Nagar, Periyanaickenpalayam, Coimbatore - 6441020** | BOQ -1 - மதிப்பீட்டை விட 11.58 % அதிகம்<br>BOQ -2 - மதிப்பீட்டை விட 18.62 % அதிகம் |

மேற்படி வரப்பெற்ற விலை விகிதத்தில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுததுள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை குறைத்து தரக்கோரி 06.01.2023, 10.01.203 மற்றும் 11.01.2023 அன்று மூன்றாவது முறையாக சம்மதக் கடிதம் கோரியதில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி BOQ-1 க்கு 0.01% மதிப்பீட்டை விட குறைவாகவும் O&M BOQ-2 க்கு 0.05% மதிப்பீட்டை விட குறைவாகவும் பணி செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக உரிய காலத்திற்குள் செய்து முடிக்கும் பொருட்டும் இப்பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள **M/S. Hruday Infra and Resource Solution PVT, Chennai,** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை எற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.390, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.4

இந்நகராட்சின் பொதுநிதியின் கீழ் வார்டு எண் 36 –ல் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் மராமத்து செய்யும் ரூ.5.30 இலட்சத்திலான பணிக்கு 23.12.2022 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | I.கிருஷ்ணமூர்த்தி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை விட 0.15 % குறைவு |
| 2. | காயாம்பு<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை விட 0.50 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் விட 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள I.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.391, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.5

பரமக்குடி நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட Scorpio வாகனம் எண் TN65BX8118 க்கு கூடுதல் பொருட்கள் வாகனத்தின் பாதுகாப்பிற்கு பொருத்த வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு கூடுதல் பொருட்கள் பொருத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு நகர்மன்றத் தலைவர் அவர்கள் நேரடியாக அறிவுறுத்தியதன் பேரில் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்துள்ள கூடுதல் பொருட்கள் வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/.க்கு செலவு மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்ட வகையில் 28.12.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/s.PMK மோட்டார்ஸ்<br>மதுரை – இராமேஸ்வரம் ரோடு பரமக்குடி | ரூ.74800 |
| 2. | ரவி மோட்டார்ஸ்<br>மேட்டுப்பட்டி கிராமம்.மதுரை | ரூ.76700 |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.PMK மோட்டார்ஸ் பரமக்குடி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கயதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.392, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| பொருள்.6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 24-ல் உள்ள செலவுகளில் ஆங்காங்கே மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்துள்ளதால் கழிவுநீர் வெளியேறி சாலைகளில் தேங்குகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் இயல்பான போக்குவரத்து பாதிக்கப்படுவதோடு சுகாதாரக்கேடு ஏற்படக்கூடிய நிலை உள்ளது. மேற்படி பகுதியை நேரடி ஆய்வு செய்து நகர்மன்றத்தலைவர் அவர்களின் அறிவுரையின் படி மேற்படி பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் சீரமைக்கும் பணி செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,30,000/- க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.393, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.7 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33-க்குட்பட்ட காமராஜர் நகர் குறுக்குத்தெருக்களில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் கழிவுநீர் சாலைகளில் வெளியேறி குளம் போல் காட்சியளிக்கிறது. இதனால் அப்பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. மேலும் அப்பகுதி மக்கள் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுகின்றனர். அதுகுறித்து அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் அளித்துள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின் படி மழைநீர் வடிகால் சீரமைக்கும் பொருட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,20,000/- க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.394, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.8 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 34-க்குட்பட்ட பங்களா ரோடு குறுக்குத்தெரு மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி வாழ் மக்கள் தங்களின் இயல்பான போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். மேற்படி சாலை குண்டும் குழியுமாக இருப்பதால் மழைகாலங்களில் அதிகளவில் நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுகின்றது. இது தொடர்பாக அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் அளித்துள்ள விண்ணப்பத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி ஆய்வு அறிவுரையில் மேற்படி சாலையை பேவர்பிளாக் சாலையாக அமைக்க வலியுறுத்தியதன் பேரில் பேவர் பிளாக் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.7,00,000/- க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை எதிர்வரும் ஏதாவது ஒரு திட்ட நிதியில் ஈடு செய்யும் பொருட்டு வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம். .<br>**தீர்மானம் எண்.395, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23-ல் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கிழக்குப்பக்க குறுக்கு சாலை (மேலச்சத்திரம்) மிகவும் பழுதடைந்துள்ளதால் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவியர்கள் மற்றும் அப்பகுதி வாழ் பொதுமக்களின் அன்றாட போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கின்றது மழைகாலங்களில் மழைநீர் அதிகளவில் தேங்கி நிற்பதால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்படி சாலையை சீர் செய்து பேவர்பிளாக் சாலையாக அமைக்க அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் கோரியதன் அடிப்படையில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6,00,000/- க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை எதிர்வரும் ஏதாவது ஒரு திட்ட நிதியில் ஈடு செய்யும் பொருட்டு வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம். .<br>**தீர்மானம் எண்.396, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.10 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் KVA ஜெனரேட்டரில் உள்ள பேரிங் செட் Selfmotor பேரிங் செட் டோர், மற்றும் AVK ஆகியவை பழுதடைந்துவிட்டதால் ஜெனரேட்டரை இயக்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் காணொலிகாட்சி கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதால் அதுசமயம் மின்தடை ஏற்பட்டால் சிரமங்கள் ஏற்படக்கூடும். எனவே மேற்படி ஜெனரேட்டரில் உள்ள பழுதுகளை உடனே சரி செய்வதற்கும் புதிய உதிரிப்பொருட்கள் வாங்குவதற்கும் ஏற்படும் உத்தேச செலவுத்தொகை ரூ. 35,000/- க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.<br>**தீர்மானம் எண்.397, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**பொருள்.11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9-ல் கிறிஸ்துவ காலனி பகுதியில் உள்ள ஊரணியும் கிழக்கு மற்றும் தெற்கு கரை பகுதியில் சாலையின் நடுவில் இரண்டு மின் கம்பங்கள் உள்ளன. மேற்படி மின்கம்பங்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதோடு சாய்ந்து கீழே விழும் நிலையில் உள்ளது. இதனால் பெரியளவில் பாதிப்பு ஏற்படக்கூடும். இது தொடர்பாக அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் இடையூறாக உள்ள இரண்டு மின்கம்பங்களை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியதன் பேரில் மேற்படி மின்கம்பங்களை மின்வாரியத்தின் மூலம் மாற்றியமைக்கவும் அதற்குரிய செலவினத்திற்கும் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.398, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12-க்குட்பட்ட தெருக்களை த.கு.நா.கு. தெரு, பட்டாபி சீதாராமன் தெரு, சோமி அய்யாவு தெரு உட்பட்ட சில தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் உடைந்துள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் வடிகால்கள் உடைந்து அடைப்புகள் ஏற்பட்டுள்ளதால் கழிவுநீர் சாலையில் தேங்குகின்றது. எனவே சுகாதாரக் சீர்கேடு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. எனவே மேற்படி மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்களை சீரமைத்து தருமாறு அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் அளித்துள்ள விண்ணப்பத்தின் பேரில் மேற்படி மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியை நகராட்சி வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.399, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிணிகள் மற்றும் இதர பாகங்கள், டோனர்க்ள் கீழ்க்கண்ட விபரப்படி அவற்றை வாங்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/- இலட்சத்திற்கு நிர்வாகத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1, | Chairman | All in one Computer |
| 2. | General Section | Computer – 2 Nos |
| 3. | Keyboard | 5 Nos |
| 4. | Mouse | 5 Nos |
| 5. | Toners | 12 A Toner – 3 Nos |
| 6. | Toners | 88A – 10 Nos |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேலும் மேற்கண்ட பொருட்கள் வாங்கும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.400, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN65-W-8911ல் உள்ள தகுதிச்சான்று (F.C) பெறும்பொருட்டு உரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ.1,60,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் மோட்டார் நிறுவனங்களிடம் 26.12.2022 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | ABT Industries Limited, மதுரை இராமேஸ்வரம் ரோடு, உலகநாதபுரம், பரமக்குடி | ரூ,1,57,300/- |
| 2. | .S/Mசெந்தில் மோட்டார் ஒர்க்ஸ் பரமக்குடி | ரூ.1,57,730/- |
| 3. | N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ் மதுரை மண்டபம் ரோடு, பரமக்குடி | ரூ.1,30,600/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும்பொருட்டு, மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்,
2. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.401, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.15

இந்நகராட்சி பொறியியல் பராமரிப்பில் இயங்கிவரும் குடிநீர் வாகன எண் TN65 7974-ல் உள்ள தகுதிச்சான்று (F.C) பெறும்பொருட்டு உரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மேற்படி குடிநீர் வாகனத்தின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூ மோட்டார் நிறுவனங்களிடம் 23.12.2022 விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | .S/Mபாபு ஆட்டோ மொபைல்ஸ், இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சிட்கோ தெளிச்சாத்தநல்லூர் பரமக்குடி | ரூ.96,450/- |
| 2. | .S/MShyamala Electricals பாரதிநகர் நடுத்தெரு, பரமக்குடி | ரூ,97,800/- |
| 3. | ஸ்ரீ தீபா எண்டர்பிரைஸஸ். தெளிச்சாத்தநல்லூர் பரமக்குடி | ரூ.99,700/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள .S/Mபாபு ஆட்டோ மொபைல்ஸ், இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும்பொருட்டு, மன்றம் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1.நகர்மன்றதலைவர் அவர்களின் முன்அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்,

2. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.402, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் உள்ள ஜீவாநகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை சுற்றி உள்ள சுற்றுச்சுவர் இடிந்து விழுந்துவிட்டதால் மேற்படி நீர்த்தேக்க தொட்டிக்கு பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதுகுறித்து அவ்வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி இடிந்த சுற்றுச்சுவரை புதிதாக கட்டுவதற்கும் பழைய சுற்றுச்சுவர் மற்றும் காவலர் அறையினை மேம்பாடு செய்வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணியை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.403, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6-ல் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் ரூ.6.00 இலட்சத்திலான பணிக்கு 30.12.2022 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்,சந்திரன்ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை விட 0.05 % குறைவு |
| 2. | திரு,எம்.சங்கர்ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை விட 0.92 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் விட 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்,சந்திரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.404, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.18

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் இதர பிற தேவைகளுக்கா சுமார் 168 எண்ணம் சிறு மின் விசை பம்புகள் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் அன்றாட மற்றும் அதிக அளவு பயன்பாடு மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்பபோது ஏற்படும் மோட்டாரகள் பழுது உள்ளீட்ட ஏனைய மோட்டாரக்ள் மற்றும் வயரிங் பழுதுகளை சரிசெய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே வார்டு எண், 19 முதல் 36 வரை உள்ள சிறுமின் விசைபம்புகளில் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திலான பணிக்கு 02.12.2022 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.M.சங்கர் ஒப்பந்ததாரர்பரமக்குடி, | மதிப்பீட்டை விட0.07 % குறைவு |
| 2. | திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரர்பரமக்குடி , | மதிப்பீட்டை விட0.82 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.M.சங்கர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.405, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.19**

பரமக்குடி நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கிய 13.45 ச,கிமீ பரப்பளவைக் கொண்ட நகரமாகும். தற்போதைய மக்கள் தொகை 104383 ஆகும். இந்நகரில் உள்ள 20 எண்ணங்கள் மேல்நிலை தொட்டிகளுக்கு காவிரி கூட்டுகுடிநீர் திட்டம் மூலம் 3.90 MLD மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் 2.60 MLD யும் சேர்த்து மொத்தம் 6.50 MLD குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 60 லிட்டர் என்ற அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. காவிரி கூட்டுகுடிநீர் திட்டம் மூலம் பெறப்படும் குடிநீர் மாதங்களில் சில நாட்கள் குடிநீர் குழாய்களில் ஆங்காங்கே ஏற்படும் உடைப்புகள் காரணமாக தடைபடுகின்றது. பெருமளவில் காவிரி கூடுகுடிநீர் திட்டத்தை மட்டுமே எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எதிர்வரும் வறட்சி காலங்களில் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு உள்ளூர் குடிநீர் ஆதாரத்தை பெருக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே முதற்கட்டமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட வைகை ஆற்றுப்படுகைகளில் உள்ள பழைய நீர் உறிஞ்சு கிணறுகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு புதிய மோட்டார்கள் பேனல் போர்டுகள், பொருத்தவும் வைகை கரையின் பக்கவாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு புதியதாக குடிநீர் குழாய்கள் மற்றும் கேபிள்கள் பதித்து குடிநீர் நீரேற்றம் செய்யவும் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்த்தில் |
|---|---|---|
| 1. | சடையாண்டிகோவில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆற்றுப்படுகையில் உள்ள கிணற்றிலிருந்து பகிர்மான குழாய்கள் பதித்தல் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பொருத்தி கிணற்றினை மேம்படுத்துதல் | ரூ.3.50 |
| 2. | மஞ்சள்பட்டிணம் 0.60 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆற்றுப்படுகையில் உள்ள கிணற்றிலிருந்து பகிர்மான குழாய்கள் பதித்தல் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பொருத்தி கிணற்றினை மேம்படுத்துதல் | ரூ.3.10 |
| 3. | தர்மராஜபுரம் 0.50 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆற்றுப்படுகையில் உள்ள கிணற்றிலிருந்து பகிர்மான குழாய்கள் பதித்தல் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பொருத்தி கிணற்றினை மேம்படுத்துதல் | ரூ.3.50 |
| 4 | கோகுலர்தெரு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆற்றுப்படுகையில் உள்ள கிணற்றிலிருந்து பகிர்மான குழாய்கள் பதித்தல் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பொருத்தி கிணற்றினை மேம்படுத்துதல் | ரூ.4.10 |
| 5. | பெருமாள்கோவில் தெரு 0.50 இலட்சம் லிட்டர் மற்றும் எமனேஸ்வரம் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு ஆற்றுப்படுகையில் உள்ள கிணற்றிலிருந்து பகிர்மான குழாய்கள் பதித்தல் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பொருத்தி கிணற்றினை மேம்படுத்துதல் | ரூ.4.00 |

மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளை இந்நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.406, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறுமின்விசை பம்புகளுக்கு தேவையான நீர்முழ்கி மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகளை எதிர்வரும் வறட்சியை சமாளிக்கும் பொருட்டு புதிதாக சப்ளை செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,50,000/-க்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.407, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.ந.க.எண்.**35945/2022/**இஏ**2-swm-15**நாள் **10.01.2023**ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டு பகுதிகளில் **26726** வீடுகள், **1** இலட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகை மற்றும் **4000**த்திற்கும் அதிகமான கடைகள், வர்த்தக நிறுவனங்கள், பேருந்து நிலையம், தினசரி மற்றும் வாரச்சந்தைகள் இயங்கி வருகிறது. மேற்கண்ட **36** வார்டுகளிலிருந்தும் சுமார் **35** மெட்ரிக்டன் குப்பைகள் உற்பத்தியாகவருகிறது. பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில உற்பத்தியாகும் **35** டன் குப்பைகளை தனியார் நிறுவனம் மூலம் சேகரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணியையும், மக்காத குப்பைகளை வளமீட்பு மையத்தில் கொண்டு சேர்க்கும் பணி, தெரு கூட்டி சுத்தம் செய்யும் பணி மற்றும் கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களை துார்வாரி சுத்தம் செய்யும் பணி, உட்பட அனைத்து பொது சுகாதார பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு

டண்1க்கு ரூ.**4033.39/-** என்ற அடிப்படை விகிதத்தில் பணி மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு ரூ.**604/-** இலட்சம் உத்தேச செலவினத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முன் அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதனை தேசிய அளவில் ஆங்கில நாளிதழிலும் தமிழ்நாடு அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும் விளம்பரம் செய்வதற்கும் இந்நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

**1.**மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்காணும் பணிகளுக்கான செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம். பொதுநிதியில் பற்றாக்குறை நேரும் பட்சத்தில் **15**வது நிதிக்குழுவின் திடக்கழிவு மேலாண்மை **Tied grand** ன் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3.**விளம்பரம் செய்ததற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.408, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

பொருள்.22

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி பழுதடைந்து உள்ளதால் அதனை மாற்றி புதிய பேட்டரி கொள்முதல் செய்வதற்கு கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வாகன எண் | Jai Bala Electronics | New SM Power Systems |
|---|---|---|---|
| **1** | TN 65 AZ 1094 | ரூ.**8400/–** | ரூ.**7900/–** |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பேட்டரி கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி வழங்கிய New SM Power Systems பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அங்கீகரிக்கலாம்

2.குறைந்த விலைப்புள்ளி வழங்கிய New SM Power Systems, Paramakudi என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.409, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

பொருள்.23

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி பழுதடைந்து உள்ளதால் அதனை மாற்றி புதிய பேட்டரி கொள்முதல் செய்வதற்கு கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வாகன எண் | Babu Auto mobile & Engineering Works | அபாரஜித் ஆட்டோமொபைல்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி |
|---|---|---|---|
| **1** | TN 65 8406 | ரூ.**8400/–** | ரூ.**8800/–** |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பேட்டரி கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் ஒர்க்ஸ் மற்றும் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அங்கீகரிக்கலாம்

**2.**குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Babu Auto mobile & Engineering Works, Paramakudi என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.410, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

---

bghUŸ.24

இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் தினமும் உருவாகும் 28 மெ.டன் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம்பிரித்து, உருவாகும் 17 மெ.டன் மக்கும குப்பைகளில் 15 மெ.டன் குப்பைகள் 3 எண்ணிக்கையிலான நுண்ம உரக்கூட மையத்தில் இயற்கை உரம் செயலாக்கப்பட்டு வருகின்றது.

இந்நகராட்சியில் நல்லமுறையில் செயல்பட்டு வரும் 3 எண்ணிக்கையிலான நுண்ம உரக்கூட மையத்தில், மக்கும் குப்பைகளை விரைவாக இயற்கை உரமாக்கல் செய்திடவும், ஈக்களின் தொல்லைகளை களைந்திடவும், ஊக்கியான **EM Solution** வருடம் முழுமைக்கும் தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை பொருட்கள் உபகரணங்கள் கொள்முதல் செய்திட ஒரு வருடத்திற்கு செலவினம் மேற்கொள்ள நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு</u><br>1.மன்றம் அங்கீகரிக்கலாம்<br>2.திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும், செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.411, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.25 | பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறையில் தற்போது வார்டு மறுவரையறை செய்யப்பட்ட 1 முதல் 36 வார்டுகள் எல்கை மற்றும் சாலை விபரங்கள் அடங்கிய புதிய நகர வரைபடம் 4அடிX3அடி அளவில் போட்டோ பிரைம் செய்து லேமினேசன் செய்து கொடுப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1.மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.412, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.26 | பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான புல்பண்ணை இடம் பரமக்குடி வட்டம், உரப்புளி கிராமம், 1/1, 1/2, 2/1 முதல் 2/4 வரை 3 முதல் 5 வரை 6/1 முதல் 6/4 வரை , 193, 198, 201, 202 மற்றும் 203ல் விஸ்தீரணம் 14.86.0ஹெக்டேர் (36.67 ஏக்கர்) இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை வட்டாட்சியர் அலுவலக நிலஅளவையர் மூலம் அளவீடு பணி மேற்கொண்டு சர்வே ஆவணங்களின்படி, அடையாளம் காணும் வகையில் சர்வேக்கல் ஊன்றி மேற்படி இடத்தினை கருவேல மரங்களை சுத்தம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.413, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.27 | பரமக்குடி நகராட்சி, எமனேஸ்வரம் குரூப் மஞ்சள்பட்டிணம் வைகை நகர் பகுதியில் வார்டு – B பிளாக்-2 நகரளவை எண். 11/71 பகுதியில் மொத்த விஸ்தீரணம் 21856 ச.அடி இடத்தில் பொது உபயோக சாலை பயன்பாட்டிற்காக சுமார் 5130 ச.அடி (நீளம் – 255 அடி அகலம் -20 அடி) தனக்கு கிரைய பாத்தியமான இடத்தை திரு.யா.ரபீக்அகமது த/பெ. யாகூப் கதவு எண்.3/38 மாதவன் நகர் பரமக்குடி என்பவர் தானப்பத்திரம் எண்.6316/2022 நாள் 16.11.2022ல் நகராட்சி ஆணையாளருக்கு தானமாக பதிவு செய்து கொடுத்துள்ளார். மேலும் மேற்படி நபர் தனது 22.12.2022ம் தேதிய விண்ணபத்தில் நகர்மன்ற பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள தெரிவித்த கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.3163/2022/எப்1<br>**தீர்மானம் எண்.414, அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது** |
| பொருள்.28 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட **25** வார்டு பகுதிகளில் நுஓநசநேவ, ஆயனரசயஉ என்ற நிறுவனம் **185** துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு **01.03.2019** முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு காலம் **28.02.2021**ந் தேதியுடன் முடிவடைவந்ததால், மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விண்ணபத்தின் அடிப்படையில், மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வந்ததால், மேலும், மேற்கண்ட நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் சிறப்பாக பணிபுரியும் பட்சத்தில் மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனையின்படி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணிகளின் முக்கியத்துவம் கருதியும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**1349** நாள்.**11.02.2021–**இல், தற்போது துப்புரவு பணி மேற்கொண்டு வரும் Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் **01.03.2021** முதல் **28.02.2022** வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் **28.02.2022** அன்றுடன் முடிவடைந்ததால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொண்டு வருவதால், நுஒளநசநேவ ஆயனரசயஉ என்ற நிறுவனத்திற்கு **01.03.2022** முதல் **30.04.2022** வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**1559**, நாள்.**25.01.2022**ன்படி, |

| | |
|---|---|
| | 01.03.2022 முதல் 30.04.2022 வரை அதே ஊதிய விகித்தில் இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 30.04.2022வுடன் முடிவடைந்ததால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, மேற்கண்ட நிறுவனம் எவ்வித புகாருக்கும் இடமின்றி சிறப்பான முறையில் துப்புரவுபணிகள் மேற்கொண்டு வருவதால் நுஒநசநேவ,<br>ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் இந்நகர்மன்ற தீர்மான எண்.55 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 138, நாள்.25.08.2022ன்படி, 01.08.2022 முதல் 31.10.2022 வரை அதே ஊதிய விகித்தில் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.216, நாள்.19.10.2022ன்படி, 01.11.2022 முதல் 31.01.2023 வரை அதே ஊதிய விகித்தில் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம், மேற்கண்ட ஒப்பந்த பணிக்காலம் 31.01.2023 அன்றுடன் முடிவடைவதால், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேலும் 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலங்களுக்கு நுஒஉநசநேவ ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet Madurai என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கிவரும் அதே ஊதிய விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிடவும் அதற்கான தொகை ளுருஊ மற்றும் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.415, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள்.29 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை நகர்மன்ற தீர்மான எண்.1047 நாள் 31.08.2019ன் படி, நுஒளநசநேவ, ஆயனரசயை என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களை கொண்டு 01.12.2019 முதல் 31.10.2020 வரை பணிகள் மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, ஓட்டுநர் பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி பொதுசுகாதார வாகனங்களை இயக்கி உள்ளதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1275 நாள்.28.10.2020–இன்படி, 01.11.2020 முதல் 31.10.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பொதுசுகாதார வாகனங்களை இயக்கிட நுஒளநசநேவ, ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்றத் தீர்மானம் 1481 நாள் 29.10.2021ன்படி அதே ஊதிய விகிதத்தில் மூன்று மாதங்களுக்கு 01.11.2021 முதல் 31.01.2022 வரை 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர நுஒளநசநேவ, ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1550, நாள்.25.01.2022ன்படி, அதே ஊதிய விகிதத்தில் 01.02.2022 முதல் 30.04.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.57 நாள்.31.05.2022ன் படி அதே ஊதிய விகிதத்தில் 01.05.2022 முதல் 31.07.2022 வரை மேலும், மூன்று மாதங்களுக்கு 10 ஓட்டுநர்களை கொண்டு பணிகள் பார்த்து வர நுஒளநசநேவ, ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.139 நாள் 25.08.2022ன்படி அதே ஊதிய விகிதத்தில் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 10 ஓட்டுநர்களைக் கொணடு பணிகள் பார்த்து வர நுஒளநசநேவ, ஆயனரசயை என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.215 நாள்.19.10.2022 ன்படி அதே ஊதிய விகிதத்தில் 01.11.2022 முதல் 31.01.2023 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு 10 ஓட்டுநர்களைக் கொணடு பணிகள் பார்த்து வர Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.01.2023ம் தேதியுடன் முடிவடைகின்றது. Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களைக் கொண்டு பொது சுகாதார வாகனங்களை இயக்கும் பணிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி மேற்கொண்டு வருவதாலும், பொதுசுகாதார அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் |

| | |
|---|---|
| | 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.416, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| பொருள்.30 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் ஜீவா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள நுண்ம உரக்கூட மையங்களில், தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 பணியாளர்களைக் கொண்டு, உரம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.1154 நாள் 26.02.2020ன் படி, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 28.02.2021 வரை பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நுண்ம உரக்கூட பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி உரம் தாயாரிக்கும் பணிகள் நடைபெற்றதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1351 நாள். 11.02.2021–இன்படி, 01.03.2021 முதல் 28.02.2022 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 5 பணியாளர்களை பணி அமர்த்திட Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1561, நாள்.25.01.2022ன்படி, 01.03.2022 முதல் 30.04.2022 வரை இரண்டு மாத காலங்களுக்கு பணி அதே ஊதிய விகிதத்தில் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள் 31.05.2022ன்படி 01.05.2022 முதல் 31.07.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.07.2022ம் தேதியுடன் முடிவடைந்ததால் இந்நகர்மன்ற தீர்மான எண்.137 நாள் 25.08.2022ன்படி 01.08.2022 முதல் 31.10.2022 வரை மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நகர்மன்ற தீர்மான எண்.217 நாள்.19.10.2022ன்படி 01.11.2022 முதல் 31.01.2023 மூன்று மாதங்களுக்கு அதே ஊதிய விகிதத்தில் பணி நிட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.03.2023ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>எனவே, Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு, உழவர் சந்தை, வாரச்சந்தை மற்றும் ஜீவாநகர் ஆகிய இடங்களில் உள்ள நுண்ம உரக்கூட மையங்களில் தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 பணியாளர்களைக் கொண்டு, பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் அவசியத்தினை கருத்தில் கொண்டும், மேற்கண்ட நிறுவனக் கடிதத்தின் விண்ணப்பத்தின்படியும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் 15 பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Evergreen Environment Services, இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் நுண்ம உரக்கூடங்களின் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட செலவினங்களை குப்பை வரி (SUC) யிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.417, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

பொருள்.31

இந்நகராட்சி பொது சுகாதார கழிவுநீர் வாகனம் TN658052க்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள உள்ளுர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட 2 நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பழுது பணிகள் விபரம் | பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | போகோ குளோபல் டிரேடர்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | சேஸிங் மாற்றுவதற்கு, டேங்கரில் இருக்கும் ரு கிளாம்ப் மாற்ற, சைலன்சரில் உள்ள பிரச்சனையை சரி செய்ய, கேபினில் உள்ள குறைகளை சரி செய்ய, பழைய கிராஸ் பார்க்குப் பதிலாக புதிய 2 கிராஸ் பார்கள் பொருத்த, புதிய ஓட்டுநர் இருக்கை, புதிய சென்டர் ஜாயின்ட்களை மாற்ற, ஆயில் இன்ஜின் மற்றும் கிளாட்ச் ப்ளைவீலுக்கு பதிலாக புதிய ப்ளைவீல் மாற்ற, பழைய எரிந்த செல்ப் மோட்டாருக்குப் பதிலாக புதிய செல்ப் மோட்டார் மற்றும் 2 புதிய ஏர் டேங்க பொருத்துதல் | ரூ.55400/– | ரூ.58525/– |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைந்த தொகைக்கு பழுது பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.418, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.32

பரமக்குடி நகராட்சி வார்டு எண்.11 கௌரி அம்மன் கோவில் தெரு பொது மக்கள் சார்பில் பெறப்பட்ட கோரிக்கை மனுவின் அடிப்படையில் இந்நகராட்சி கௌரி அம்மன் கோவில் தெருவை நிர்வாக நலன் கருதி அப்பகுதி பொதுமக்களுக்கு சரியான அஞ்சலக முகவரி அளிக்கும் நோக்கில் கீழ்க்கண்ட தெருக்களில் தற்போது உள்ள பெயர்களில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளாமல் திசையினை குறிக்கும் வகையில் சிறிய திருத்தம் மட்டும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| தெருக்களின் பழைய பெயர் (Asper Municipal Record) | தற்போதைய தெரு திருத்தம் | மாற்றம் செய்யப்பட வேண்டிய வரி விதிப்புகள் |
|---|---|---|
| கௌரி அம்மன் கோவில் தெரு | கௌரி அம்மன் கோவில் மேற்கு தெரு | பட்டியலில் கண்டுள்ள வரி விதிப்புகள் 94 எண்ணம் |
| கௌரி அம்மன் கோவில் தெரு | கௌரி அம்மன் கோவில் தெற்கு சந்து | பட்டியலில் கண்டுள்ள வரி விதிப்புகள் 29 எண்ணம் |
| கௌரி அம்மன் கோவில் தெரு | கௌரி அம்மன் கோவில் வடக்கு சந்து | பட்டியலில் கண்டுள்ள வரி விதிப்புகள் 32 எண்ணம் |

<u>அலுவலகக்குறிப்பு</u>

தற்போது நகராட்சி ஆவணங்களில் உள்ள தெருக்களில் பெயரில் எவ்வித மாற்றமும் இன்றி திருத்தம் மட்டும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2881/2022/எப்1

**தீர்மானம் எண்.419, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

தலைவர்
பரமக்குடி நகர்மன்றம்